1984 மார்ச் 22]

மாவட்ட அளவில் நில மேம்பாட்டுக் குழுக்களை அமைக்கும் திட்டம்.

394—*(வினா எண். 21431) திரு. எஸ். இராசாராமன் : திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் நில மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்பெறும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் 28-9-1983ல் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் மாவட்டக் குழுக்களை அமைத்துள்ளது. இதுகாறும், பெரியார், தர்மபுரி மாவட்டங்களில் குழுக்கள் செயல்பட, தொடர் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட ஆட்சித் தலைவர்களால் எடுக்கப்பட்டுள்ளன. இதர மாவட்டங்களில் குழுக்களின் கடமையைத் துவக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் குழுக்கள் அமைக்க இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் குழுக்கள் அதிகாரிகள் மட்டத்தில் மட்டும் இருக்கிறதா? அதிகாரப் பற்றில்லாமல், மக்களில் உண்மையாக விவசாயிகளின் நிலைமையை அறிந்து ஆலோசனை சொல்லக் கூடிய வகையில், அதிகாரப் பற்றற்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி என்றால் யார் யார் என்ற விவரமும் சொல்லப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர், அதன் தலைவர் மாவட்ட வன அலுவலர், மாவட்ட வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவிப் பொறியாளர், அக் குழுவில் அலுவல் தொடர்பாக உறுப்பினர்கள் மற்றும் மாநிலத்தில் உள்ள சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களில் 4 பேர்களுக்கு மேற்படாமல் அதில் உறுப்பினர்களாக இருப்பர், முற்போக்கு விவசாயி ஒருவரும் இதில் உறுப்பினராக இருப்பர்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நிர்வாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதிலே இருப்பதாகக் கூறினார்கள். தனியாக முற்போக்கு விவசாயி என்றும் சொன்னார். சட்டமன்ற உறுப்பினர்களில் ஒரு மாவட்டத்தில் 4 பேர்கள் என்று சொன்னார். அந்த 4 பேர்களும், கட்சியின் அடிப்படையில் தரப்படுகிறார்களா? அல்லது அரசே நிச்சயிக்கின்ற முறையில் உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அந்தப் பணிக்குத் தேவையான வகையில், எந்தெந்த உறுப்பினர்களுக்கு ஆர்வம் இருக்கிறதோ, அந்த உறுப்பினர்களின் பெயர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் செய்வார்கள்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியிலே முற்போக்கு விவசாயி என்று ஒரு விவசாயி உறுப்பினராக இருப்பார் என்று சொன்னார்களே. முற்போக்கு விவசாயி என்பதற்கு ஏதாவது நார்ம்ஸ் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பயிர் தொழிலிலே ஈடுபாட்டோடு ஈடுபட்டுள்ளவர்கள். அதிலே மிக அதிகமாக ஆர்வம் உள்ளவர்கள்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நில மேம்பாடு திட்டம் மதுரை போன்ற இடங்களில் எல்லாம் தற்போது இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே எம்.எல்.ஏக்கள் பங்கு பெற்றிருப்பதாகவும் சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் அப்படி இருக்கக் கூடிய எம்.எல்.ஏக்கள் யார் யார்? இந்த நில மேம்பாடு திட்டத்தால் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள், வி.பி. பாலசுப்பிரமணியன், சந்திரசேகரன், குப்புசாமி, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜக்கையன், முற்போக்கு விவசாயி என்ற முறையில் டபிள்யூ பி.ஏ. நாகராஜன் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நிலத்தை எப்படிச் சீர்படுத்துவது, கடினமான நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவருவது போன்ற கருத்துக்களை எடுத்துச் சொல்வார்கள். அதற்கு வேளாண்மைத் துறை, பொறியியல் துறைகளினுடைய ஆலோசனை பெறப்படும்.

## தமிழ்நாட்டில் மேலும் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

395. *(வினா 22044) திரு. இரா. தாமரைக்கனி: திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மேலும் ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க செயற்குறிப்புள்ளதா?

(ஆ) புதிய கல்லூரி எங்கு அமைக்கப்படும்?

(இ) எப்போது முதல் கல்லூரி செயல்படும்?